www.padippakam.com


# செந்தாரகை

රතු තරුව

சோசலிஜக்கிய இலங்கைகாக தமிழ்மொழிமூலம் வெளிவரும் செய்தித்தாள்

2012-ஜனவரி மலர்-85 QD/34இலங்கையின் செய்தித்தாளாக பதிவுசெய்யப்பட்டது விலை ரூபா.10/=



உள்ளே....

* மவிமு விவாதம் ஓர் அடி
* பாலஸ்தின மக்களின் உரிமைக்காக
* அரசுக்கும் த.தே.கூ இடையே


# வடக்கில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குகின்றது

யுத்தம் முடிவடைந்து 3 ஆண்டுகளை அண்மித்துள்ள நிலையில் வடக்கின் மக்கள் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றனர். தெற்கின் ஏனைய பிரதேசங்களில் நடைமுறையிலுள்ள சட்டம் வடக்கிற்கு செல்லுபடியாவதில்லை என்பதை தற்போது தெளிவாகவே காணக்கூடியதாயுள்ளது. அரசாங்கத்திற்கு சார்பாக இல்லாத எந்தவொரு கட்சிக்கும், சிவில் அமைப்புக்கும் அல்லது சுயாதீனமானதொரு பிரஜைக்கும் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக தமது அலுவல்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. தெற்கில் நிலவுகின்ற சுதந்திரம் வடகிழக்குமாகண மக்களுக்கு வழங்கப்படமாட்டாதென்பதை பாதுகாப்புப் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் தற்போது பகிரங்கமாகவே தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர்.

வடக்கில் இயங்கி வருகின்ற உதயன் பத்திரிகை உட்பட பத்திரிகை அலுவலகங்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியிலேயே பேணிவரப்படுகின்றன என்பதோடு தமிழ் சுயாதீன ஊடகவியலாளர்கள் வடக்கில் வாழ்வதற்கு பெரும் அச்சம் தெரிவிக்கின்றனர் என அறியக்கிடைத்துள்ளது. அதேவேளை டிசெம்பர் இறுதியில் யாழ்ப்பாண பல்கலைககழகத்தின் விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில், இறுதி அறிவிப்பாகக் குறிப்பிடப்பட்டு அச்சுறுத்தும் ரீதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. விரிவுரையாளர்கள் சங்கத்தின் செயலாளர் விக்னேஷ்வரன் மற்றும் மாணவர் சங்கத்தின் தவபாலசிங்கம் ஆகியோருக்கு இதன் மூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

இது தொடர்பாக அறிவித்தலொன்றை வெளியிடுகின்ற ஐக்கிய சோசலிசக் கட்சியின் செயலாளர் தோழர் சிறிதுங்க ஜயசூரிய, யாழ்ப்பாண மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு உடனடியாக ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு முன்வரத்




## லலித் - குகன் காணாமற்செய்யப்பட்டமைக்கு நீங்கள் வகைப்பொறுப்புக் கூறல் வேண்டும்

லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பிரதேசத்தில் வாகனத்தில் வந்த ஆயுதந்தரித்த குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டனர் என்பதற்கு கண்ணால்கண்ட சாட்சிகள் உள்ளன. இவர்கள் இருவரும் மக்கள் போராட்ட இயக்கத்தின் அங்கத்தவர்கள் என்பதும் இவர்கள் டிசெம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினக் கூட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக செயலாற்றிக் கொண்டிருந்தனர் என்பதும் அறியவந்துள்ளது. இவர்கள் காணாமற்போய் 5 தினங்களுக்குப் பின்னர் இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் கோப்பாய் பிரதேசத்தில் இந்துக் கோவிலொன்றுக்குப் பக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே ஒரு மாத காலம் கடந்துள்ள போதிலும் லலித் மற்றும் குகன் ஆகிய இரண்டு இளைஞர்களுக்கும் என்ன நடந்தது என்பதைப் பற்றி பொறுப்பானதொரு கூற்றை வெளியிடுவதற்கு பொலீஸாரும் அரசாங்கமும் தவறியுள்ளது. ஆரம்பத்தில் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பத்திரிகையாளர் மாநாட்டில், இவர்கள் இருவரும் காணாமற்போகவில்லை எனவும், அவர்கள் ஏதோ ஒரு இடத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார். தற்போது அமைச்சர் கெஹலிய இதனை மறந்துள்ளார்போல் தெரிகின்றது. இப்போது அனைத்து அதிகாரிகளும் மௌனமாயுள்ளனர்.

ஆயினும் உண்மை நிலை யாதெனில், அரச அனுசரனையைப் பெறுகின்ற ஆயுதம் தரித்த குழுக்கள் வடக்கில் தமது கட்டுப்பாட்டின் கீழ் பயங்கரத்தைப் பரப்பி வருகின்றனர் என்பதும் அவர்களுக்குக் கட்டுப்படாதவர்களைத் தாக்கியும், காணாமற்போகச் செய்தும் அல்லது கொலை செய்தும் வருகின்றனரெனவும் மக்கள் கூறுகின்றனர். வடக்கிலும் தெற்கிலும் நடைபெறுகின்ற இவ்வாறான பயங்கரத்திற்கு எதிராக அனைத்து சக்திகளினதும் ஐக்கியமானதொரு ஆர்ப்பாட்டத்தின் பொருட்டு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென செந்தாரகை கூறுகின்றது.

## இனவாதத்தை தூண்டாதே

ஊடக உரிமையாளர்கள் மற்றும் ஊடகத்துறையின் பலசாலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் மத்தியில் நடைபெறுகின்ற மாதாந்தக் கலந்துரையாடல் சுற்றில் இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட கூற்றானது சிங்கள மக்களை தூண்டிவிடுவதற்காக செய்யப்பட்டதென்பது தெளிவாகின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பு எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் கருத்தினையும் கௌ்கைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என ஜனாதிபதி இதில் தெரிவித்திருந்தார்.



13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழ் சட்டத்தின்படி கிடைக்க வேண்டிய பொலீஸ் அதிகாரங்களையும் காணிகள் பற்றிய அதிகாரத்தையும் வழங்க கூட்டமைப்பு அரசாங்கம் தயாராயில்லை என்பதைப் போன்றே வடக்கிலும் கிழக்கிலும் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க மாட்டேன் என்ற ஜனாதிபதியின் கூற்றானது மிகவும் பாரதூரமானதொரு விடயமாகும். 13வது திருத்தச்சட்டத்திக்கும் அப்பால் செல்கின்ற தீர்வொன்றை சமர்ப்பிப்பதாக இதற்கு முன்னர் கூறியிருந்த ஜனாதிபதியே இப்போது 13 திருத்தச்சட்டத்தை கூட வெட்டி விடுவதைப் பற்றிக் கூறுவது சிங்கள முதலாளித்துவ வர்க்கம் விடுதலைபுலிகளின் 30 வருட கால யுத்தத்திலிருந்து எதனையும் கற்கவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் என்றவாறு முதலாளித்துவ தமிழ் கூட்டமைப்பைப் பற்றி இவ்வாறு கூறியிருப்பதானது முழுத் தமிழ் மக்களையும் அவமதிப்பதாக உள்ளது.

படிப்பகம்

රතු තරුව
செந்தாரகை
53/6 ඊ.ඩී. දාබරේ මාවත, කොළඹ 5
E.Mail - usp@sltnet.lk Tel -4510289 Fax 2504647
එක්සත් සමාජවාදී පක්ෂයේ වෙබ්අඩවියට ඔබත් පිවිසෙන්න
www.lankasocialist.com

# மவிமு விவாதம் - ஓர் அடி முன்னோக்கியும் - இரண்டு அடிகள் பின்னோக்கியும் - லெனின்

மக்கள் விடுதலை முன்னணியினுள் கருத்தியல் ரீதியிலான பிரிவினையானது ஒழுங்கமையப்பெற்ற கட்டங்களை நோக்கிச் செல்வதை தவிர்க்க முடியாத நிலைமை வரை வளர்ச்சியடைந்துள்ளது. மவிமு உத்தியோக ரீதியிலான தலைமைத்துவம் பல்வேறு காரணங்களைக் காட்டி மவிமு நெருக்கடியை சில்லறை விடயமொன்றாக சுருக்கிக் காட்டுவதற்கு மேற்கொண்ட முயற்சி தற்போது தோல்வியடைந்துள்ளது. சோமவன்ச டில்வின் தலைமைத்துவமானது தோன்றியுள்ள கருத்தியல் நெருக்கடிக்கு முகம்கொடுப்பதற்குப் பதிலாக முதிர்ச்சியடையாத இளம் பராயத்தினரின் பிரச்சினையாக கட்சியினுள் உருவாகியுள்ள உரையாடலுக்கு வரைவிலக்கணம் கூறுவதற்கு முயற்சியெடுத்தமை அவர்களது கோட்பாட்டு ரீதியிலான அடிப்படையின் வங்குரோத்து நிலைமையை நன்றாகவே எடுத்துக்காட்டுவதாக உள்ளது. மவிமு இடதுசாரிப் போக்கை ஒடுக்குவதற்காக ராஜபக்ஷஆட்சியுடன் அவர்கள் இணக்கப்பாட்டுடன் செயற்படுகின்றதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

புரட்சிகர சமூக மாற்றத்திற்காக தியாக மனபான்மையுடன் செயலாற்றிய இளம் பருவத்தினரின் எதிர்பார்ப்புகள் முறிவடைந்துள்ளமையின் வெளிப்பாடே மவிமுவின் ஊடாக வெடித்து வெளியே வந்துள்ளது. பழைய இடதுசாரி இயக்கத்தினால் 1956 இல் பண்டாரநாயக்கவுடன் போட்டியிடாத உடன்படிக்கையின் ஊடாக ஆரம்பித்த முதலாளித்துவ கூட்டு அரசியலின் மூலம் இடதுசாரி சுயாதீனமான பயணப்போக்கு முடிவுறுத்தப்பட்டது. இடதுசாரி பழைய தலைவர்களின் வரலாற்று ரீதியிலான காட்டிக்கொடுத்தல் 1964 இல் தீர்க்கமான கட்டத்தை அடைந்தது. இலங்கையின் அரசியல் வகிபாகத்தினுள் உருவாகிய மேற்படி வெற்றிடத்தை நிரப்புவதை மையமாகக் கொண்டே மவிமு உருவாகின்றது. இங்கு முன்னையோர்களுடைய புத்தக குரு வாதத்திலிருந்து மீளல் எனும் கருத்தியலுக்கு மறைந்து மார்க்சிஸத்தை தேசிய அரசியலினுள் சிங்களமயமாக்கலுக்கு உள்ளாக்குவதே விஜேவீர கடைபிடித்த செயற்பாடாக இருந்தது. மார்க்சிஸத்தின் அடிப்படைக் கற்பித்தலான சடத்துவ பௌதீகவாத விதிமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு ஆட்சியதிகாரத்தைக் குறுகியகால ரீதியில் கைப்பற்றுவதை இலக்காகக் கொண்ட ஐந்து விரிவுரைகளுக்கு புரட்சிகரச் செயற்பாடு வரையறுக்கப்பட்டது. முதலாளித்துவ ஆட்சியினுள் புறந்தள்ளப்பட்ட பகுதியினராக மாறியிருந்த இலங்கையின் தொலைதூரப் பிரதேசங்களில் வாழ்கின்ற கிராமிய சிங்கள இளைஞர்களுக்கு சேகுவேரா பாணியிலான போராட்டம் பெரிதும் கவர்ச்சியை அளித்தது. ஆங்கிலம் கற்ற பழைய இடதுசாரி தலைவர்களின் மத்திய வகுப்பு வாழ்க்கை முறை மற்றும் பேச்சுக் கடை அரசியல் கடுமையாக விமர்சிக்கப்பட்டதோடு, தியாக மனப்பான்மையுடன் செயற்படுவதன் மூலம் விரைவாக ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது வலியுறுத்தப்பட்டது.

தமிழ் மக்களது தேசிய விடுதலை பற்றிய போராட்டத்திற்கும்



தொழிலாளர் வர்க்கத்தினரின் போராட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் புரிந்துகொள்ள மறுத்த விஜேவீர பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்தி அப் பிரச்சினைக்கு முகம்கொடுப்பதைத் தவிர்த்துக்கொண்டார். தமிழ் மக்களது போராட்டம் தொடர்பில் மார்க்சிஸ நிலைப்பாட்டில் இருந்து செயலாற்றுதல் பிற்போக்கான சிங்கள மக்களுக்கு மத்தியில் மவிமுவைப் பரப்புவதற்குத் தடையாயுள்ளதென அவர் நினைத்தார். இவ்வாறு சிங்கள வர்க்கவாத இனவாத நிலைப்பாட்டில் நிற்பதை நியாயப்படுத்துவதற்காக, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் பொருட்டு அது அத்தியாவசியமானதொரு உபாய வழிமுறையாகும் என விஜேவீர அறிமுகப்படுத்தினார். மவிமு இடதுசாரிப் போக்கின் புபுது ஜாகொட மற்றும் சமீர கொஸ்வத்த ஆகிய தலைவர்கள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் சோசலிசத்தைக் கட்டியெழுப்புகின்ற போராட்டத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்குவதைக் காண முடியாதுள்ளது. இடதுசாரிக் குழுவின் தலைமையின் கீழ் செயற்படுகின்ற "நாம் இலங்கையர்கள்" இயக்கத்தின் ஊடாக தமிழ் சிறைக் கைத்திகளின் பிரச்சினைகள் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதன் ஊடாக தமிழ் மக்களைக் கவர்வதற்கு முயற்சி எடுப்பதானது மவிமு வரலாறு பூராவும் பிணைந்துள்ள உண்மையான பிரச்சினையிலிருந்து தவிர்ந்திருக்கும் பொருட்டாகும். முதலாளித்துவ ஆட்சியாளர்களால் முன்மொழியப்பட்டுள்ள 13 வது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகிய எண்ணக்கருக்களுக்கு மவிமு உத்தியோக ரீதியிலான தலைமைத்துவமும் அதேபோன்று இடதுசாரிக் குழுவும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தலானது விஜேவீரவின் காலத்திலிருந்து தொடர்ந்து வருகின்ற மவிமு ஆரம்பகால மார்க்சிஸமற்ற மற்றும் சிங்களவாத அரசியல் பிரயோகத்தின் வெளிப்பாடாகும். சோசலிச ஆட்சியொன்றை உருவாக்கியதன் பின்னர் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறுகின்ற வெறும் கூற்றானது அவர்களிடையே மறைந்துள்ள ஸ்டாலின்வாத அரசியல் மரபுரிமையின் ஊடாக தொடர்ந்து வருகின்ற ஒன்றாகும்.

இடதுசாரி இயக்கம் மற்றும் தொழிலாளர் வர்க்கம் தொடர்பிலான மவிமுவின் வெற்று விளக்கங்கள், முதலாளித்துவத்தை வீழ்த்துவதற்கு தொழிலாளர் வர்க்கத் தலைமைத்துவத்துடன் கூடிய மாற்று வழிமுறையொன்றைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் அவர்களிடையே நிலவுகின்ற சிறு முதலாளித்துவ எதிர்ப்பின் எதிர்விளைவாகும். எவ்வளவுதான் உரத்த குரலில் பொல்செவிக் புரட்சியின் தெரிவுசெய்யப்பட்ட வாசகங்களை எடுத்துக்காட்டிய போதிலும் லெனின் மற்றும் ட்ரொஸ்கி ரஷ்ய புரட்சியின் வெற்றி வரை மேற்கொண்டுசென்ற மிகவும் சிக்கலான செயற்பாட்பாடுகள் தொடர்பில் மவிமு ஒருபோதும் தனது அங்கத்தவர்களை தயார்செய்யவில்லை. இதற்குப் பதிலாக பொல்செவிக்குகள் மற்றும் மென்செவிக்குகளுக்கு மத்தியில் நிலவிய பிரிவினையை பொறிமுறையாகப் பயன்படுத்தி மவிமு அல்லாத அனைவரையும் மென்செவிக்குகளாகக் குறிப்பிட்டு குரோதக் கருத்தியல் கட்டியெழுப்பப்பட்டது. ஆதலால் இடதுசாரி இயக்கத்தின் எதிர்காலப் பயணம் தொடர்பில் நடைபெறவேண்டியிருந்த உரையாடலில் மவிமு அங்கத்தவர்கள் ஒருபோதும் ஈடுபடவில்லை. இடதுசாரிப் பிரிவினர்களையும் தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்களையும் புரட்சிகர மாற்றத்திற்கு எதிராக நிற்கின்ற துரோகிகளாகவும் மென்செவிக்குகளாகவும் குறிப்பிட்டு எதிர்த் தரப்பினரைக் கொலை செய்வதற்குத் தேவையான மனத் திரிபுநிலை உருவாக்கப்பட்டது. சிறு முதலாளித்துவ கரில்லாவாத அமைப்பும் எதிர்த் தரப்பினரைக் கொலை செய்வதை வீரச் செயலாக மேற்கொண்டது அதே விதத்திலாகும்.

1988 89 இல் தோன்றிய கலவரம் மவிமு கடைப்பிடித்த கலவர ரீதியிலான வரலாற்றின் ஒரு பகுதியாகும் என்பதை இடதுசாரிக் குழுக்களே ஏற்றுக்கொண்டுள்ளமை முக்கியமானதொரு சம்பவமாகும். மவிமு உத்தியோகபூர்வ தலைமைத்துவம் 88 89 சம்பவங்கள் தொடர்பில் பகிரங்கமானதொரு நிலைப்பாட்டை எடுப்பதைத் தவிர்த்து வருகின்ற நிலைமையினுள் புபுது ஜாகொட சமீர கொஸ்வத்த உள்ளடங்கிய குழு இத்தகையதொரு நிலைப்பாட்டை எடுத்துள்ளமை மீள்நோக்கிப் பார்ப்பதன் ஊடாக இடதுசாரி இயக்கத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் நிலவுகின்ற உரையாடலுக்கு முக்கியமானதாக அமையும். 1987 இல் ஜே.ஆர். ரஜீவ் காந்தி கையொப்பமிட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை இலங்கையின் அரசியல் வரலாற்றில் தீர்க்கமானதொரு திருப்புமுனையாக இருந்தது. மேற்படி உடன்படிக்கை முதலாளித்துவ முறைக்கு பிராந்திய ரீதியில் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு இரண்டு முதலாளித்துவ நாடுகளுக்கு மத்தியில் கைச்சாத்திடப்பட்டதொன்றாகும். உண்மையான இடதுசாரி இயக்கத்தினால் குறிப்பிட்ட முதலாளித்துவ உடன்படிக்கையின் பங்குதாரர்களாவதற்கு ஒருபோதும் முடியாதெனினும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் மற்றும் நவசமசமாஜ கட்சிகள் இந்திய - இலங்கை உடன்படிக்கையைப் பாதுகாத்து இந்திய சமாதானப் படை 'ipkf' இந்நாட்டிற்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமை இரண்டாவது தீர்க்கமான காட்டிக்கொடுத்தலாகும். (நவசமசமாஜக் கட்சியினுள் சிறுபான்மைக் குழுவாக இருந்த குழு இந்திய இலங்கை உடன்படிக்கைக்கும் ipkf செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்ற நிலைப்பாட்டிற்கு எதிராகக் கடுமையாக நின்று கட்சியின் உட்புறத்தில் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டது). இடதுசாரித் தலைவர்களின் மேற்படி காட்டிக்கொடுத்தலினுள் இனவாத அடிப்படையில் மவிமு இந்திய எதிர்ப்பு தேசப்பற்று இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தது. மார்க்சிஸ கண்ணோட்டத்தில் இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்குப் பதிலாக மவிமு இனவாத அடிப்படையில் தெற்கின் சிங்கள சமூகத்தை இனவாத ரீதியில் தூண்டிவிட்டது. தேசப்பற்றுமிக்க மக்கள் இயக்கத்தின் கட்டளைக்கு அடிபணியாத தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் அநேகமானோர் கொலை செய்யப்பட்டனர். இறுதியில் மவிமு குரல்கொடுத்த தேசப்பற்றுமிக்க சிங்கள அரச இராணுவம் மவிமு தலைவர்களைப் படுகொலை செய்தமை வரலாற்றில் நடைபெற்ற பேரழிவொன்றைப் போன்றே நகைப்புக்குரியதொன்றாகவும் இருந்தது. முதலாளித்துவத்தை வீழ்த்தி உலக சோசலிசப் புரட்சியை வெற்றிகொள்கின்ற செயற்பாட்டினுள் எமது கடமையை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு சிங்கள மற்றும் தமிழ் தொழிலாளர்களினதும் பாதிக்கப்பட்ட மக்களினதும் போராட்டத்தின் ஒன்றிணைப்பை மவிமு தலைவர்கள் ஒருபோதும் வலியுறுத்தவில்லை. இலங்கையின் புரட்சி தெற்கிக்கு வரையறுக்கப்பட்ட சிங்கள மக்களுடைய அலுவலாகும் என்பதையும் புறம்பாக நின்று தமிழ் மக்களால் அதற்கு பங்களிப்புச் செய்யலாம் என்பதையுமே மறைமுகமாக மவிமு தலைவர்கள் வெளிக்காட்டினார்கள். மவிமு இடதுசாரிக் கருத்தைக்கொண்ட குழு வடக்கின் தமிழ் மக்களது இயக்கத்தில் தலையிடுதல் தொடர்பில் காட்டுகின்ற புதிய வலியுறுத்தலானது, விஜேவீரவினால் ஏற்பட்ட தவறைத் திருத்துவதற்கு மேற்கொள்கின்ற ஒரு முயற்சியா என்பதை ஆராய வேண்டியுள்ளது. மார்க்சிஸவாதிகள் என்ற வகையில் பாதிக்கப்பட்ட ஒரு இனத்துக்கு பிரிந்து செல்வதற்கு உள்ள உரிமை உள்ளடங்கலாக தமிழ் மக்களில் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல் வரை அவர்கள் செல்வார்களா என்பதை வினவ வேண்டியுள்ளது. அதேபோன்று யுத்தத்திற்கு மவிமு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் உள்ள நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தல் அத்தியாவசியமாகும்.

இதற்கிணங்க மவிமுவினுள் தோன்றியுள்ள நெருக்கடியானது ஓரிரு விடயங்களின் அடிப்படையில் அமைந்ததொன்றல்ல அதன் முழு அரசியல் வரலாற்றையுமே பரிசோதனைக்கு உள்ளாக்குகின்ற ஒன்றாகும். பழைய இடதுசாரித் தலைவர்களின் காட்டிக்கொடுத்தல்களுக்கு எதிராக புதியதொரு புரட்சிகர சக்தியொன்றைக் கட்டியெழுப்புவதை முன்னிட்டு மவிமு கடைப்பிடித்த விதிமுறை மற்றும் அதன் கோட்பாட்டு ரீதியிலான அடிப்படை இந்நெருக்கடியின் ஊடாக மேலெழுந்துள்ளது. இங்கு சோமவன்ச உள்ளிட்ட தற்போதைய தலைவர்களின் அரசியல் வீழ்ச்சிக்கு எதிராக எழுந்துள்ள மவிமு இடதுசாரிப் போக்குக்கு பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்படும். 1994 சந்திரிகாவின் காலகட்டத்திலிருந்து சோமவன்ச டில்வின் தலைமைத்துவம்

03ம் பக்கம் தொடர்ச்சி......

www.padippakam.com

# பாலஸ்தின மக்களின் உரிமைக்காக போராடுவேன் சோசலிச உறுப்பினர் கூறுகின்றார்

இஸ்ரவேல் ஆட்சியாளர்களால் திறந்தவெளிச் சிறைச்சாலையின் நிலைமைக்கு ஆக்கப்பட்டுள்ள பாலஸ்தீன காஸா பகுதியிலுள்ள மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர். இவர்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைக்கூட மிகவும் சிரமத்துக்கு மத்தியிலேயே நிறைவேற்றிக் கொள்கின்றனர். அமெரிக்காவின் பொம்மை அரசாங்கமான இஸ்ரவேல் எல்லாப் பக்கங்களாலும் காஸா பகுதியைச் சுற்றிவளைத்து இராணுவத்தை ஈடுபடுத்தியுள்ளதோடு அதற்குரிய கடற் பிரதேசம்கூட தடைப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரவேல் அரசாங்கத்தின்/இராணுவத்தின் அனுமதியின்றி எவருக்கும் அங்கு செல்ல முடியாது.

இந்த நிலைமை தொடர்பில் நீதிக்காகத் தோற்றுகின்ற உலகம் பூராவுமுள்ள மக்களுக்கு மத்தியில் கடும் எதிர்ப்பு நிலவுகின்றது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகளைக் கூட காஸா பகுதிக்கு எடுத்துச் செல்வதை இஸ்ரவேல் அரசாங்கம் மட்டுப்படுத்தியுள்ளது. சர்வதேச சட்டத்திற்குக் கூட முற்றும் முரணான விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இத் தடைப்படுத்தலுக்கு சவால் விடுத்து ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அயர்லாந்து சோசலிசக் கட்சியின் உறுப்பினர் தோழர் போல் மர்பி மேலும் சில சமாதானச் செயற்பாட்டாளர்களுடன் சேர்ந்து மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட உதவித் தொகைகளுடன் ஒருசில கப்பல்களில் காஸா பகுதிக்குச் செல்வதற்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் முற்பட்டார். நவெம்பர் 04 ஆம் திகதி இஸ்ரவேல் இராணுவம் சர்வதேச கடல் பரப்பில் தோழர் போல் மர்பி உள்ளிட்ட குழுவினரை கைது செய்து இஸ்ரவேலிலுள்ள சிறைச்சாலையொன்றில் ஒரு வார காலம் தடுத்து வைத்திருந்தது. யூத ஆட்சியாளர்களின் இச் செயலானது முற்றாக சட்ட விரோத கோபமூட்டக்கூடிய ஒன்றாகும். சர்வதேச கடற்பரப்பில் கப்பல்களை அல்லது அதிலுள்ள நபர்களை கைது செய்வதற்கு அல்லது வேறு விதத்திலான தடைகளை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு நாட்டிற்கும் உரிமை கிடையாது. ஆயினும் இஸ்ரவேல் அரசாங்கம் மேற்படி எந்தவொரு சட்டத்தையும் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் இச் சட்டங்களை மீறியதாகக் கூறி மேற்படி ஆட்சியாளர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு எந்தவொரு சர்வதேச அமைப்பினாலும் முடியாதுள்ளது. அமெரிக்கா எப்போதும் அவர்களைப் பாதுகாத்தல் அதற்கானதொரு காரணமாகும்.

போல் உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் மிகவும் கீழ் மட்டத்திலானதொரு சிறைச்சாலையிலேயே தடுத வைக்கப்பட்டிருந்தனர். தடுத்து



வைக்கப்பட்டிருந்த ஒருவார காலம் பூராவும் தமது குடும்பத்தினருடன் தொலைபேசியில் உரையாடுவதற்கு 3 நிமிட நேரம் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அது ட உத்தியோகத்தர்களின் முன்னிலையில் நடைபெற்றதோடு, அரசியல் விடயங்களைப் பற்றிப் பேசுவதற்கு முடியாதெனவும் தெளிவாகவே அறிவிக்கப்பட்டிருந்தது. இக் குழுவினரிடம் இருந்த படப்பிடிப்புக் கருவிகள், மடிக் கனணிகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் அனைத்தையும் இஸ்ரவேல் உத்தியோகத்தர்கள் அபகரித்தனர். இன்னமுமே அவை திருப்பிக் கொடுக்கப்படவில்லை என அறியவந்துள்ளது.

சிறைசாலையில் அவர்கள் நாளொன்றில் 21 மணித்தியாலங்கள் சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அதேநேரம் அவர்களுக்கு நித்திரைகொள்ள முடியாத விதத்திலேயே உத்தியோகத்தர்கள் செயற்பட்டனர். இரவில்நித்திரைகொள்கின்றபோது ஐந்து தடவையாவது அவர்களை விழித்தெழச் செய்வதற்குக்கூட அவர்கள் முற்பட்டனர். பத்திரிகை வாசிப்பதற்கு அல்லது எதிர்ப்புகளின் தேவையானதொரு விடயத்தை எழுதுவதற்குக்கூட இடமளிக்கப்படவில்லை. சிறைச்சாலையினுள்ளும் அதற்கு வெளியிலும், கைது செய்யப்பட்டமைக்கு எதிராக அயர்லாந்து மற்றும் சர்வதேச மட்டத்தில் மேலெழுந்தகாரணமாக இறுதிச் சில தினங்களில் நிலைமை ஓரளவு சீராகியிருந்தது. இவர்களுக்கு முகம்கொடுக்க நேரிட்ட நிலைமை இவ்வாறெனின், இஸ்ரவேல் சிறைச் சாலைகளில் உள்ள பாலஸ்தீன மக்களினதும் காஸா பகுதி எனப்படுகின்ற திறந்தவெளிச் சிறைசாலையிலுள்ள பாலஸ்தீன மக்களினதும் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை புரிந்துகொள்ள முடியும் என தோழர் போல் அண்மையில் கூறியிருந்தார்.

இஸ்ரவேல் அரசாங்கத்தின் செயற்பாடானது முற்றாகவே சட்டவிரோதமானதும், அதேபோன்று குற்றவியலானதுமாகும். எதிர்காலத்திலேனும் மேற்படி இஸ்ரவேல் கடற் தடையை மீறி காஸா பகுதிக்கு வர நினைக்கின்றவர்களை ஆர்வமிழக்கச் செய்வதும் தடுப்பதுமே அவர்களது நோக்கமாகும். ஆயினும் இஸ்ரவேலின் இந்த மிருகத்தனமான செயற்பாட்டின் காரணமாக பாலஸ்தீன மக்களுக்கு நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்கு சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இயக்கத்திற்கு உள்ள எமது திடஉறுதி மென்மேலும் வலுபடுத்தப்படுமென்றே தோழர் போல் மர்பி இஸ்ரவேல் சிறையிலிருந்து விடுதலை பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

ஸ்ரீநாத்

# PTA தடுப்புக் கைதிகள் 893 பேரில் 64 பேருக்கு மட்டுமே வழக்குத் தொடரப்படுகிறது.

அவசரகாலச் சட்டம் பெயரளவில் நீக்கப்பட்டுள்ள போதிலும் இன்னமுமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்படாத பெரும் தொகையினர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. இதில் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள தடுப்புக் காவலில் உள்ளவர்களின் எண்ணிக்கை 893 ஆகும். இதில் 64 பேருக்கு மாத்திரம் குற்றச்சாட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் இன்னமுமே பெரும் எண்ணிக்கையானோர் எவ்விதக் குற்றச் சாட்டும் சமர்ப்பிக்கப்படாமலும், வழக்குத் தாக்கல் செய்யப்படாமலும் பல வருடங்கலாக தடுப்புக் கட்டளையின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்படள்ளனர்.

மேற்படி தடுப்புக் கைதிகளில் தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி சிங்கள இளைஞர்களும் உள்ளனர் என

அறியவந்துள்ளது. தொடர்ந்தும் வழக்குத் தொடரப்படாது இவர்களை தடுத்து வைத்திருத்தல் இவர்களது மனித உரிமைகளை மீறுவதாகும் என்பதோடு அரசாங்கம் தமக்கு அரசியல் ரீதியில் அடிவருடித்தனம் புரிகின்றவர்களுக்கு பக்கச்சார்பாக நடக்கின்றதென்பதையும் காணக்கூடியதாயுள்ளது. எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் முக்கியஸ்தர்களான கே.பீ. என்பவர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் போன்றோர் வழக்குத் தாக்கல் செய்யப்படாது அரச அனுசரணையின் கீழ் சுதந்திரமாக நடமாடுதல் இதற்கானதொரு சிறந்த உதாரணமாகும்.

02ம் பக்க தொடர்ச்சி......

கடைப்பிடித்த முதலாளித்துவ கூட்டு அரசியலின் (ஆரம்பத்தில் நன்னடத்தை என்ற பெயரில் அழைக்கப்பட்ட) ஊடாக முதலாவதாக மஹிந்த ராஜபக்ஷவினதும் இரண்டாவதாக சரத் பொன்சேகாவினதும் முதலாளித்துவ அரசியலுடன் நேரடியாகவே ஒருங்கிணைவதை விமர்சிப்பதற்கு அப்பால் செல்ல வேண்டியுள்ளது. முதலாளித்துவ கூட்டு அரசியலில் சேர்ந்ததன் ஊடாக மவிமுவுக்கு இருந்த அடிப்படை துரிதமாக வீழ்ச்சியடைந்துள்ளதென்பதைச் சுட்டிக்காட்டுதல் இலகுவானதொரு விடயமாகும். அத்துடன் நின்றுவிடாது இரத்தத்தையும் உயிரையும் தியாகம் செய்து கட்டியெழுப்பிய இயக்கமாயிருந்த போதிலும் மவிமு ஆரம்பத்திலிருந்தே நிலவி வருகின்ற சிங்கள இனவாதப் பிணைப்புகளிலிருந்து விலகி வர்க்கப் போராட்ட செயற்பாட்டுடன் இணைவது எவ்வாறு என்பது உரையாடப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். அவ்வாறின்றி விஜேவீரவை சமயப் பொருளொன்றாக ஆக்கி சோமவன்ச டில்வின் தலைமைத்துவம் விஜேவீரவின் கற்பித்தல்களிலிருந்து நீங்கியுள்ளதாக செய்யப்படுகின்ற முறையீடுகள் புதியதொரு புரட்சிகர இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமையாது.

மவிமுவினுள் உள்ள விஜேவீரவை பக்தியுடன் ஏற்றுக்கொள்கின்ற சீடர்களைத் தமது குழுவின்பால் ஈர்த்துக்கொள்ளும் பொருட்டு விஜேவீரவை பூஜிக்கக்கூடியவராக மாற்றுவதற்கான முயற்சியைப் புரிந்துகொள்ள முடியுமாயிருந்த போதிலும் விஜேவீர உள்ளிட்ட மவிமு கடந்த 5 தசாப்த காலத்தினுள் ஈடுபட்டிருந்த விதிமுறை தொடர்பில் திறந்த மனதுடன் மீட்டிப்பார்த்தலும் வர்க்கப் போராட்டத்தின் தேசிய மற்றும் சர்வதேச அனுபவங்களின் அடிப்படையில் இருந்து கலந்துரையாடுதலும் சரியானதொரு இடதுசாரி இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமையும். இளம் சந்ததியினரைக் கவர்ந்திழுக்கக் கூடியதாயிருந்த ஆற்றலே மவிமுவின் விசேட பண்பாக இருந்தது. எதிர்கால புரட்சிகரச் செயற்பாட்டிற்கு இது பெரிதும் பாராட்டப்பட வேண்டியதாகும் என்பதில் சந்தேகமில்லை. அதே போன்று தொழிலாளர் வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல். புரட்சிகரக் கட்சியினுள் கா[illegible] வேண்டிய முக்கிய பண்பாகும். தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ முறையின் ஒரு பகுதியாகச் செயற்படுகின்ற போதிலும், அதனைப் புறக்கணித்து செயலாற்றுவதற்கு புரட்சிவாதிகளால் முடியாதென்பதை மாக்சிஸத்தின் ஸ்தாபகர்கூட சுட்டிக்காட்டியுள்ளார். ரஷ்யாவின் சமூகப் புரட்சியாளர்கள்கூட தொழிலாளர் வர்க்கத்திற்குப் புறம்பாக நின்று புரட்சியை முன்னெடுப்பதற்கே முயற்சித்தனர். லெனின் போன்ற தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியை சரியாக அடையாளம்கண்டு, அவர் முதலில் குறிப்பிட்ட தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் சர்வாதிகாரம் என்ற சூத்திரத்தை தொழிலாளர் வர்க்கத்தின் சர்வாதிகாரம் என திருத்தினார். அதேபோன்று கட்சியைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் ட்ரொஸ்கிக்கு இருந்த தளர்வான மனப்பாங்கை மாற்றியமைத்து புரட்சிகரக் கட்சியைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் லெனினின் கருத்தை ஏற்றுக்கொள்ள நேரிட்டது. புரட்சிகரத் தலைவர்கள் புரட்சிச் செயற்பாட்டினுள் இவ்வாறே அனுபவங்களின் அடிப்படையில் முன்னோக்கிச் செல்கின்றனர். மார்க்சிஸமென்பது புரட்சிகர வெற்றியின்பால் தொழிலாளர் வர்க்கம் உள்ளிட்ட சகல விதமான பாதிக்கப்பட்ட மக்களையும் வழிநடத்துவதற்குள்ள வழிகாட்டல் வரைபடமேயன்றி ஒரு மதம் அல்ல. ஒரு அடி முன்னோக்கியும் இரண்டு அடிகள் பின்னோக்கியும் என்ற பெயரில் லெனின் எமது கட்சியின் நெருக்கடி என்ற நூலை 1904 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எழுதினார். 1903 ஜுலை மற்றும் ஆகஸ்ட்டுக்கு இடைப்பட்ட காலத்தில் புருசல்ஸ் மற்றும் இலண்டனில் நடைபெற்ற ரஷ்ய சமூக சனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது மாநாட்டில் செயலாற்றிய விதத்தை அவர் விளக்குகின்றார். தாம் தலைமைத்துவம் வழங்கிய பொல்செவிக் குழு (பெரும்பான்மையானோர்) மற்றும் ஜுலியஸ் மாடொவ் தலைமைத்துவம் வழங்கிய மென்செவிக் குழு (சிறுபான்மையினர்) என்றவாறு கட்சியினுள் உருவாகிய பிரிவினைக்கு ஏதுவாயமைந்த காரணங்களை லெனின் இந் நூலின் ஊடாக பகுப்பாய்வு செய்துள்ளார்.

சிறிதுங்க ஜயசூரிய

www.padippakam.com

# அரசாங்கத்திற்கும் தமிழ் கூட்டமைப்புக்கும் மத்தியிலான இழுபறி நிலை

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் கடந்த ஒரு வருட காலத்தினுள் நடைபெற்றுள்ளது. தமிழ் கூட்டமைப்புக்கு புலிகளின் தரகர்கள் என பழி சுமத்திய அரசாங்கம் அக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைப் பற்றி மாக்சிஸவாதிகள் என்ற வகையில் எம்மால் மகிழ்ச்சியடைய முடியும். "வெட்ட முடியாத கையை முத்தமிடுதல" என்ற வகையிலேயே அரசாங்கம் தமிழ் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றது. கடந்த பொதுத் தேர்தலிலும் சென்ற வருடம் ஜுன் மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலிலும் தமிழ் கூட்டமைப்பை 'வெட்டி' விடுவதற்கே ராஜபக்ஷ ஆட்சி முயற்சியெடுத்தது. ஆயினும் அந்த அனைத்துத் தேர்தல்களிலும் மிகவும் சிறந்த முறையில் அக் கூட்டமைப்பு வெற்றிபெற்றமையால் தமிழ் மக்களின் பிரதானமான பிரதிநிதிகள் என்றவகையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு நேரிட்டுள்ளது.

மேற்படி பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதைப் புரிந்துகொள்ள முடியுமாயிருப்பினும் எதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது என்பதை அரசாங்கமோ தமிழ் கூட்டமைப்போ இதுவரை பகிரங்கமாக உத்தியோகபூர்வ ரீதியில் அறிவிக்கவில்லை. எனினும் அரசாங்கத்திற்கு தமிழ் கூட்டமைப்புடன் :TNA) ஒரு விடயத்தைப் பற்றி மாத்திரமே பேச வேண்டியுள்ளது. ஆயினும் அது வெறுமனே வடக்கின் பிரச்சினை மட்டுமல்ல இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை பற்றியாகும். தமிழ் மக்களின் தேசிய உரிமையை அங்கீகரிப்பதைத் தவிர அப் பிரச்சினைக்கான இடைத் தீர்வுகள் எதுவும் கிடையாது. சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர்களும் பெரும்பான்மை மக்களாகிய சிங்களவரும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே அதற்கான அடிப்படையாயுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் சிங்களவாத அரசாங்கம் இந்த உரிமையை அங்கீகரிப்பது ஒருபுறமிருக்க, சட்டப் புத்தகத்தில் உள்ள 13வது திருத்தம் எனப்படும் சிறிய நடவடிக்கைகளையாவது ஏற்றுக்கொள்வதில்லை. மாகாண சபைகளைப் பெயரளவில் பேணிவந்த போதிலும் அதே சட்டத்தில் உள்ள காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதில்லை என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்தார். அவரால் நியமிக்கப்பட்ட, கற்றுக்கெண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தை முடியுமானவரை மட்டுப்படுத்தி அங்கு தற்போது நிலவுகின்ற இராணுவமயமாக்கலை முடிவுக்குக் கொண்டுவருதல் வேண்டுமெனக் கூறிய போதிலும் ஒரு இராணுவ முகாம்கூட நீக்கப்பட மாட்டாதென ஜனாதிபதி கூறியுள்ளார். தொடர்ந்து தமிழ் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும் என்பது தெளிவாகின்றது.

ஏற்கனவே சட்டப் புத்தகத்தில் உள்ள காணி - பொலீஸ் அதிகாரங்களைக்கூட வழங்குவதற்குத் தயாராயில்லாத அரசாங்கத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு எதைத்தான் கதைக்கின்றது என்பதைப் பற்றி எம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. பாலங்கள், மதகுகள் உள்ளிட்ட கொங்கிரீட் தீர்வுகளைத் தவிர தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுகளுக்கு ஜனாதிபதி தயாராயில்லை என்பதை அவர் தெளிவாகவே எடுத்துக்காட்டியுள்ளார். உலகத்தை ஏமாற்றுவதற்காக பாராளுமன்றத்




தெரிகுழுவொன்றை நியமிப்பதற்கு முன்மொழிந்துள்ள போதிலும், அது நடக்காத திருமணத்திற்கு முகூர்த்தம் பார்ப்பதைப் போலாகும். தமிழ் கூட்டமைப்பு இக் குழுவில் பங்குபற்றாது என தெளிவாகவே கூறியுள்ளது. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி காலத்தை விரயமாக்குவதற்கு தமிழ் கூட்டமைப்பிற்கு தேவையிருப்பினும் சாதாரண தமிழ் மக்களிடமிருந்து எழுகின்ற குரோதத்தை ஓரளவுக்கேனும் தெரிவிப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. சிங்கள இனவாதத்திலும் முதலாளித்துவத்திலும் இரு கால்களையும் பதித்துக்கொண்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துடன் எதைப் பற்றித்தான் பேச்சவார்த்தை நடத்துவது? என்பது தெளிவாயில்லை. மேற்கூறிய கூற்றுக்களின் மூலம், ஜனாதிபதி ராஜபக்ஷஅவர்களுடன் பேச்சவார்த்தை நடத்துவதற்கு எதுவும் எஞ்சியில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி தெரிகுழுவை நிராகரிப்பது சிங்கள இனவாதக் கண்ணோட்டத்திலேயன்றி தமிழ் மக்களின் சார்பாகவல்ல என்பது மீண்டும் தெளிவாகின்றது.

மன்னார் பேராயர் வண. ராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் உள்ளிட்ட தமிழ் சிவில் செயற்பாட்டாளர்கள் சிலர் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அனுப்பியுள்ளதும் கடந்த டிசெம்பர் 25 ஆம் திகதி ராவய பத்திரிகையின் 20வது பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்ததுமான கடிதத்தின் மூலம் இந்த நிலைமை சிறப்பாக விபரிக்கப்பட்டுள்ளது. "சமவுரிமை" என்ற சொல்லுக்குள் மறைந்து தமிழ் மக்களை ஏமாற்ற முடியாதெனவும், சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற அடிப்படையிலிருந்து தன்னாட்சியை வழங்குவதின் மூலமன்றி தமிழ் மக்களுடைய தேசிய அபிலாசைகளை நிறைவுசெய்ய முடியாதெனவும் அக்கடிதத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் பற்றி பாசத்துடன் கதைக்கின்ற, சுயநிர்ணய உரிமையை நிராகரிக்கின்ற ஒருசில சிங்கள புத்திஜீவிகளும் வேறு அமைப்புகளும் இந்நிலைமையைப் புரிந்துகொள்ளல் அவசியமாகும். குறிப்பாக மவிமுவிலிருந்து பிரிந்து சென்று தற்போது தமிழ் மக்கள்பால் சகோதரத்துவத்துடன் கை நீட்டுகின்ற மக்கள் போராட்ட இயக்கம் இவ்விடயத்தைப் புரிந்துகொண்டு தமிழ் மக்களுக்கு மாக்சிஸ கண்ணோட்டத்தில் விழித்துப் பேசுவதற்கு முற்படுதல் வேண்டுமென்பதை நாம் உணர்கிறோம்.

1980 ஆம் ஆண்டுகளிலிருந்து அண்ணளவாக 2005 வரை தெற்கே நிலவிய சோசலிச சக்தியை இன்று காண முடியாதுள்ளது. தேசிய . பிரச்சினைக்கு அல்லது இனத்துவப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்படுதல் வேண்டுமென கருத்தரங்குகளையும் / செயலமர்வுகளையும் நடத்திய, வெளிநாட்டுப் பணத்தில் செயற்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்களையும் இன்று காண முடியாதுள்ளது. எனினும் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் வடக்கிற்கும் கிழக்கிற்கும் சமாதானமும் சுதந்திரமும் உருவாகியுள்ளதாக பெருமை பேசிய அரசாங்கமே ஒருபுறம் தமிழ் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற அதேவேளை மறுபுறம் ஒற்றையாட்சி இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான விடயங்களை ஆராயும் பொருட்டு பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கும் செயலாற்றியுள்ளமை சிரிப்புக்குரியதொரு விடயமாகும். தேசிய பிரச்சினையை தொடர்ந்தும் தட்டிக்கழிக்க முடியாதென்பதை அரசாங்கமும் உணர்ந்துள்ளதையே இதன் மூலம் காணக்கூடியதாயுள்ளது. ஆதலால் இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொண்டு அந்த மக்களாலும் சம பங்காளர்களாக இந்நாட்டின் ஆட்சியில் இணைந்துகொள்ளக் கூடியதான அரசியல் - அரசியலமைப்பு ரீதியிலான வரைச்சட்டகமொன்றைக் கட்டியெழுப்பும் பொருட்டு குரலெழுப்புவதும் போராடுவதும் வடக்கிலும் - தெற்கிலும் உள்ள இடதுசாரிச் சக்திகளின் கடமைப்பொறுப்பாகும். இங்கே குறிப்பாக கிழக்கில் வசிக்கும் முஸ்லிம் மக்களையும் புறந்தள்ளாது அவர்களது விருப்பு வெறுப்புகளையும் பாதுகாக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட விவசாய தொழிலாளர் மக்கள்சபை வரைச்சட்டகமொன்றைத் தயாரித்தல் அவசியமாகும். அதனை இந்த முதலாளித்துவ அரசாங்கத்திடம் ஒப்படைக்காது தமிழ் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளையும் தெற்கின் இடதுசாரி முற்போக்கு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் அமைப்புகளின் வழிப்படுத்தலின் மூலம் உருவாக்குதல் வேண்டும். ராஜபக்ஷ ஆட்சியைக் கடந்து சென்று தமிழ் மக்களுடைய தேசிய போராட்டத்தை வெற்றிகொள்வதானது தனியே தமிழ் மக்களது மட்டுமன்றி முழு நாட்டிலும் வசிக்கின்ற பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினதும் வெற்றியாக இருக்கும். வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கில் வசிக்கின்ற தொழிலாளர்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் இளைஞர்களின் ஒன்றிணைந்த போராட்டத்தின் ஊடாகவே அதனை வெற்றிபெறச் செய்யலாம். மேற்படி போராட்டமானது முதலாளித்துவ முறையை வீழ்த்திவிட்டு சோசலிச சமூகமொன்றைக் கட்டியெழுப்புகின்ற நோக்கத்துடன் இணைந்ததாயிருத்தல் வேண்டும்.

ஸ்ரீநாத் பெரேரா

එක්සත් සමාජවාදී පක්ෂය
ஐக்கிய சோசலிச கட்சி
United Socialist Party
ஐக்கிய சோசலிசஇலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக நீங்களும் எங்களோடு தொடர்பு கொள்வதற்கு அல்லது கலந்துறையாடுவதற்கு விரும்பினால் இக்கூப்பனை நிரப்பி.அனுப்புங்களிரும்பினால் இக்கூப்பனை நிரப்பி.அனுப்புங்கள்
பெயர்------------------------ வயது---------
முகவரி-----------------------------------------------------
தொழில்-------------------- தொ.பே---------------
Sentharahai
53/6 E.D Dhabare Mawatha Narahenpita Colombo-5
Tel. 4510289 0112504647 Email usp@sltnet.lk

படிப்பகம்